# மாகாணக் கல்வித் திணைக்களம்
# வடக்கு மாகாணம்
## Provincial Department of Education, Northern Province

## முதலாம் தவணைப் பரீட்சை – 2024

| தரம் - 12(2025) | பரதநாட்டியம் | நேரம்: 3.00 மணித்தியாலம் |
|---|---|---|

பெயர் / சுட்டெண் ……………………………………………………………………………

மேலதிக வாசிப்பு நேரம்:10 நிமிடங்கள்

### பகுதி - I

❖ சரியான விடையைத் தெரிவு செய்க.

01. தெய்வம் குரு சபை என்போரை வணங்கும் முகமாக அமைக்கப்பட்ட உருப்படி
(1) அலாரிப்பு (2) ஜதீஸ்வரம் (3) கீர்த்தனை
(4) பதம் (5) வர்ணம்

02. ;;;;; , த, திங், கி / ண தொம் த, திங், கிண / தொம் த, திங், கிண தொம் // இது அமைந்த ஜாதி
(1) திஸ்ரம் (2) சதுஸ்ரம் (3) கண்டம்
(4) மிஸ்ரம் (5) சங்கீர்ணம்

03. உபகீத வாச்சிகம் என்பது
(1) நடனமானது கணிப்பித்துக் கொண்டே நடனமாடுதல்
(2) பாடகர் சபையோர் மெச்சும்படி பாடுதல்
(3) பாடகர் சபையோர் மெச்சும்படி பாட பெண்கள் அபிநயித்தல்
(4) நட்டுவனார் திறமைமிக்க கணிக்க நடன பாத்திரம் அபிநயித்தல்
(5) பாத்திரமானவன் பாடலை தானே பாடிக் கொண்டு அபிநயித்தல்

04. மூர்க்க பக்தியில் முரட்டுத்தனமான பக்தியை வெளிப்படுத்திய நாயனார்
(1) துளசிதாசர் (2) கண்ணப்பநாயனார் (3) இராமனுஜர்
(4) சுந்தரமூர்த்தி நாயனார் (5) அப்பூதியடிகள்

05. லகுவின் கால அளவைக் கொண்டு மாத்திரையை நிச்சயப்படுத்தும் நூல்
(1) நாட்டிய சாஸ்திரம் (2) அபிநயதர்ப்பணம் (3) பரதசூடாமணி
(4) சங்கீதரத்னாகரம் (5) பரதக்கலை

06. தாளத்தை எப்படிப் போடவேண்டும் என நிர்ணயிப்பது
(1) கதி (2) அங்கம் (3) மார்க்கம் (4) கிரியை (5) பிரஸ்தாரம்

07. அபிநயதர்ப்பணத்தை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவர்
(1) வீரராகவன் (2) உ.வே. சுவாமிநாதஐயர் (3) எஸ். ஸ்ரீராமதேசிகன்
(4) வேதாந்ததேசிகர் (5) ஆனந்தக்குமாரசுவாமி

08. சாத்வீக அபிநயத்தில் "வியஞ்சகம்" குறிப்பது
(1) குரல்மாற்றம் (2) நடுங்குதல்
(3) ஸ்தம்பித்தல் (4) கண்தலை இவற்றினால் அபிநயத்தல்
(5) நிறமாற்றம்



kalvi.lk

09. நாட்டிய சாஸ்திரத்தில் நாடகத்தலைவன், தலைவி, சூத்திரதாரன், நாட்டிய மங்கை ஆகியோரைப் பற்றி குறிப்பிடப்படும் அத்தியாயம்
(1) 24 வது (2) 23 வது (3) 22வது (4) 25 வது (5) 26வது

10. கதகளி நடனத்தில் ஒப்பனை செய்பவர்
(1) ஒப்பனைக்காரன் (2) அண்ணாவியார் (3) நட்டுவனார்
(4) சௌட்டிக்காரன் (5) கூத்தனார்

11. அணிகலன்கள் யாவும் வெள்ளியில் அணிந்து ஆடப்படும் சாஸ்திரிய நடனம்
(1)பரதம் (2) ஒடிசி (3) கதக் (4) கதகளி (5) மோகினி

12. பரதநாட்டியம் எந்த பாரம்பரியத்தின் ஊடாக நடன வடிவம் பெற்றது.
(1) குறவஞ்சி (2) யக்ஷகானம் (3) சதிர்
(4) பாகவதமேளம் (5) நாட்டியம்

13. நாட்டிய சாஸ்திரத்தை தெலுங்கில் மொழி பெயர்க்க முனைந்தவர்
(1) மானவல்லி ராம கிருஷ்ணகவி (2) திரு நீலகண்டர்
(3) பரதர் (4) நந்திகேஸ்வரர்
(5) எஸ். ஸ்ரீராம தேசிகன்

14. சோடஸாங்க அட்டவணையில் குருவிராமத்தின் எண்ணிக்கை
(1) 06 (2) 07 (3) 08 (4) 09 (5) 10

15. சௌக்க காலத்தினைக் குறிப்பது
(1) விளம்பகாலம் (2) மத்திம காலம் (3) துரிதகாலம்
(4) அதிதுரித காலம் (5) விளம்பித மத்திம காலம்

- 16 தொடக்கம் 20 வரையான வினாக்களுக்கு பின்வரும் அட்டவணையைப் பயன்படுத்தி மிகப்பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

| சாஸ்திரிய நடனங்கள் | தோன்றிய இடம் | உடையலங்காரம் | இசை | பிரதான இசைக்கருவி | நிலை |
|---|---|---|---|---|---|
| கதகளி | கேரளா | கூடைபோன்ற பாவாடை மேலங்கி | சோபான இசை | A | மண்டலம் |
| மணிப்புரி | மணிப்பூர் | B | ஹிந்துஸ்தானி கர்நாடக இசை | மிருதங்கம் | அலை போன்ற அசைவு |
| பரதநாட்டியம் | தென்னிந்தியா | விசிறி மடிப்பு ஆடை மேலங்கி | கர்நாடகஇசை | மிருதங்கம் | C |
| கதக் | D | பிஜாமா மேலங்கி சர்வாணி | ஹிந்துஸ்தானி | பக்கவாஜ் தபேலா | சமநிலை |
| குச்சுப்புடி | ஆந்திரா | விசிறி மடிப்பு ஆடை மேலங்கி | E | மிருதங்கம் | அரைமண்டி |

16. "A" யில் இடம்பெற வேண்டிய இசைக்கருவி
(1) தபேலா (2) செண்டை (3) மிருதங்கம் (4) தவில் (5) கடம்

17. "B" யில் இடம்பெற வேண்டிய ஆடை அமைப்பு
(1) பாவாடை தாவணி (2) விசிறிமடிப்பு ஆடை (3) சேலை வேட்டி
(4) கரப்பு உடை (5) பியாமா மேலங்கி



kalvi.lk

18. "C" யில் இடம்பெற வேண்டிய நடனத்திற்குரிய நிலை

(1) சமபாத நிலை (2) அரைமண்டி (3) முழுமண்டி
(4) மண்டலம் (5) திரிபங்க நிலை

19. "D" யில் இடம்பெற வேண்டிய பிரதேசம்

(1) தென்னிந்தியா (2) கேரளா (3) இராஜஸ்தான்
(4) ஆந்திரா (5) தஞ்சாவூர்

20. "E" இல் இடம்பெற வேண்டிய இசை

(1) ஹிந்துஸ்தானி (2) சோபான இசை (3) கர்நாடக இசை
(4) குஜராத் இசை (5) நாட்டார் இசை

## பகுதி II

❖ **முதலாம் வினா உட்பட விரும்பிய நான்கு வினாக்களுக்கு விடை தருக.**

01) (i) பஞ்ச ஜாதிகளையும் அவற்றின் சொற்கட்டுகளையும் தருக. (05 புள்ளிகள்)
(ii) கண்டஜாதி ததிங்கிண தொம் மை முடிவாகக் கொண்டு 4 ஆவர்த்தனங்களிற்கு ஆதிதாளத்தில் கோர்வை அமைக்குக. (15 புள்ளிகள்)

02) (i) தாளதசப்பிராணன்களை எத்தனை பிராணன்களாக வகைப்படுத்தலாம்? (01 புள்ளி)
(ii) இப்பிராணன்களுள் இடம்பெறும் தாளதசப்பிராணன்களை வகைப்படுத்துக (05 புள்ளி)
(iii) யதிகள் எத்தனை வகைப்படும்? (02 புள்ளி)
(iv) யதிகளின் வகைகளைக் குறிப்பிட்டு உதாரணங்களுடன் விளக்குக? (12 புள்ளி)

03) (i) அபிநயம் என்றால் என்ன? (02 புள்ளி)
(ii) அபிநயத்தின் வகைகளைக் குறிப்பிட்டு அவற்றின் வேறு பெயர்களையும் எழுதுக. (04 புள்ளி)
(iii) வாச்சிக அபிநயம், அதன் வகைகள், பயன்படுத்தப்படும் பொறிகள் பற்றி விளக்குக (10 புள்ளி)
(iv) ஆஹார்ய அபிநயத்தின் 4 வகைகளையும் விளக்குக. (04 புள்ளி)

04) (i) மோகிணி யாட்டத்தினைப் பின்வரும் அம்சங்களை அடிப்படையாகக் கொண்டு விளக்குக.
1. தோற்றம், வளர்ச்சி
2. ஆட்டமுறை
3. ஆடை, அணிகலன்கள்
4. பக்கவாத்தியம்

05) சிறுகுறிப்பு எழுதுக.
(i) பக்தி மார்க்கம்
(ii) அபிநய தர்ப்பணம்

06) நடனத்தில் அபிநயங்களின் வகிபங்கு பற்றி விளக்குக.



kalvi.lk

kalvi.lk

Education
கல்வி
අධ්‍යාපන

**எங்கள் குறிக்கோள்**

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.

**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

**kalvi.lk**

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page